செ.வெ.எண்: 318/2016 நாள்: 01.06.2016

# பத்திரிகை செய்திக் குறிப்பு

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மூலம் சீர் மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணம், ஈமச்சடங்கு செலவினம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை , மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல், மாதாந்திர முதியோர் ஓய்வூதியம் ஆகிய திட்டங்களின் கீழ் குறைந்த பட்சம் ரூ.500/- முதல் அதிகபட்சம் ரூ.1,00,000/- வரை மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டடு வருகின்றன. எனவே தகுதியுடைய சீர்மரபினர் இன மக்கள சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்யாமலிருப்பின் உடனடியாக மேற்படி நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்திடவும், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தகுதியான நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடையவும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

(ஒம்) சஜ்ஜன்சிங் ரா.சவான்
மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

/உண்மை நகல் - உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.